உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றன்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "


| | | |
|---|---|---|
| மலர். 2<br>Vol. 2 | ஈஸ்வர வருஷம் ஆடிமீ 1௳<br>ஜுலை—1937 | இதழ் 4<br>No. 4 |


## திருப்புகழ்.

### திருச்செந்தூர்.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள

அந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்

செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனோ

கொந்தவிழ் சரண் சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெற அரக் கருமாளக்
குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

## பதவுரை.

*கொந்து அவிழ்சரண் - பூங்கொத்துகள் மலர்ந்துள்ள தேவரீரது திருவடிகளே, சரண் சரண்என - அடைக்கலம் அடைக்கலம் என்று சொல்லி அபையம் புகுந்து, கும்பிடு புரந்தரன் - வணக்கம் புரிந்த இந்திரன், பதிபெற - தனது பொன்னுலகத்தைப்பெற்று இன்புற வும், குஞ்சரி குயம் புயம் பெற . தேவயானையால் வளர்க்கப்பட்ட தேவயானையம்மையாரது தனங்கள் தேவரீரது புயாசலங்களைப்பெற வும், அரக்கா (உம்-அசை) மாள - இராக்கதர்கள் அழிவெய்தவும், குன்று இடிய - கிரௌஞ்சமலை தூள்பட்டு இடியவும், அம் பொனின் திருவரை கிண்கிணி - அழகியதும் பொன்னாலாகியதுமாகிய திருவரை யிலுள்ள சதங்கையானது, கிணின் கிணின் கிணின் என - கிணின் கிணின் என்று இனிமையாகச் சப்திக்கவும், இளம் குழைகளில் - இள மையான செவிகளில், குண்டலம் அசைந்து பிரபைவீச - குண்டல மாகிய காதணிகள் மெல்ல அசைந்து ஒளிசெய்யவும, செம் சிறு சதங்கை - பாதத்தில் அணிந்துள்ள அழகிய சிறு சதங்கைகள், தந்தனம தனம் தனம் தன என கொஞ்சிட - தந்தனம் தனம் தனம் தன என்று மிகுந்த இனிமையாகக் கொஞ்சி ஓசையைச்செய்யவும், மணித்தண்டைகள் - இரத்னமணிகளால் செய்துள்ள தண்டைகளா னது, கலின் கலின் கலின் என - கலின் கலின் கலின் என்று ஒலிக்க வும், திருவான - சர்வ மங்களங்களுக்கும் உறைவிடமான மகாலட் சுமியாகிய,சங்கரி - சுகத்தைக் கொடுப்பவளாகிய பார்வதியம்மையார்,*

மனங் குழைந்து - அன்பின் மிகுதியால் மனங்குழைந்து, உருக முத்தந்தர-உள்ளம் உருகி முத்தங்கொடுக்கவும், வரும் செழுந்தளர்நடை-மெல்ல அசைந்து அசைந்து வருகின்ற அழகிய தளர்நடையுடைய, சந்ததி - இளங்குமரனே, சகம் தொழும் - உலகமெல்லாம் கைகூப்பி வந்தனம புரிகின்ற, சரவண - சரவண தடாகத்தில் உய்யும்பொருட்டு வெளிப்பட்ட, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே, அந்தகன் வரும் தினம் பிறகிட - அடியேனுடைய உயிரைப்பற்ற கூற்றுவன் வருகின்ற நாளில் புறங்கொடுத்து ஓடவும், சந்ததமும் வந்து கண்டு - சதாகாலமும் விலைமகளிர் வீதியில்வந்து அவர்களது அழகைப் பார்த்து, அரிவையர்க்கு - அந்த பொதுமாதர்களிடத்திலே, அன்பு உருகு - அன்பு வைத்து மனம் உருகுகின்ற, சங்கதம் தவிர - நட்பானது நீங்கவும், முக்குணம் மாள - சத்துவம் இராசசம் தாமசம் என்ற மூன்று குணங்களும் மாண்டுபோகவும், அந்திபகல் என்ற இரண்டையும் ஒழித்து - மறப்பு நினைப்பு (கேவல சகலம்) என்கிற இரண்டு அவஸ்தைகளையும் அடியோடு ஒழித்து, இந்திரிய சஞ்சலங்களை அறுத்து - மெய் வாய் கண் நாசி செவி என்ற ஐம்புலன்களால் உண்டாகிற துன்பங்களை அடியோடு நீக்கி, அம்புய பதங்களின் பெருமையை கவிபாடி - தாமரை மலரையொத்த தேவரீரது திருவடிகளின் பெருமைகளை அமைத்து பாமாலைகளைப்பாடி, செந்திலை உணர்ந்து உணர்ந்து உணர்வு உற - திருச்செந்திலம்பதியில் தேவரீர் எழுந்தருளியிருக்கின்ற தத்துவத்தையும் செந்திற்பதியின் உட்கருத்துக்களையும் ஓங்காரவடிவாக ஆலயம் அமைந்திருக்கின்ற திறத்தையும் மெய்யறிவால் உணர்ந்து அம்மெய்யறிவு நிறைவடையவும், கந்தனை அறிந்து அறிந்து - கந்தனாகிய நினது சொரூபலக்ஷணத்தையும் தடஸ்த லட்சணத்தையும் அறிந்து, அறிவினில் சென்று செருகும் தடம் தெளிதர-அந்த அறிவின் வழியிலே சென்று உண்மைப்பொருளைச் சேருகின்ற முத்திநெறி இன்னதென்று தெளிவடையவும், தணியாத சிந்தையும் அவிழ்ந்து அவிழ்ந்து-சாந்தியையடையாத (கல்போன்ற) மனமானது நெகிழுந் தன்மையையடைந்து, உரையொழித்து - சொல்லற நின்று, என் செயல் அழிந்து அழிந்து அழிய - என்செயலால் எல்லாம் நடைபெறுகிறதென்ற தற்போதமானது அடியோடு அழியவும், மெய் சிந்தை வர - உண்மை யறிவானது உண்டாகவும், என்று - எந்த நாளில், நின் தெரிசனைப்படுவேனோ - தேவரீரது திவ்ய தெரிசனம் அடியேன் கிடைக்கப்பெறுவேனோ ?

## பொழிப்புரை.

பூங்கொத்துகள் மலர்கின்ற தேவரீரது திருவடியில் அடைக்கலம் அடைக்கலம் என்று கூறி அபயம் புகுந்து வணங்கிய தேவேந்திரன் தனது பொன்னுலகத்தைப் பெற்று இன்பத்தை யடையவும், ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற தேவயானையம்மையாரது தனங்கள் நினது புயாசலங்களைப் பெறவும், அரக்கர்கள் மாளவும், கிரௌஞ்ச வெற்பு தூள்பட்டு இடியவும், அழகியதும் பொன்னாலாகியதுமாகிய நினது திருவரையிற் கட்டியுள்ள சதங்கைகள் கிணின் கிணின் கிணின் என்று இனிய ஒலியைச் செய்யவும், இளஞ் செவிகளில் குண்டலங்கள் மெல்ல அசைந்து ஒளி வீசவும், திருவடியில் அணிந்துள்ள அழகிய சிறு சதங்கைகள் தந்தனம் தனம் தனம் தன என்று இனிமையாகக் கொஞ்சி சப்திக்கவும், இரத்னமணிகளாலாகிய தண்டைகள் கலின் கலின் கலின் என்று ஒலிக்கவும், சரவணங்களங்களுக்கும் உறைவிடமானவரும், சுகத்தைக் கொடுப்பவருமாகிய உமாதேவியார் அன்பினமிகுதியால் மனமானது குழைந்து உருகி முத்தங் கொடுக்கவும் மெல்ல வருகின்ற அழகிய (இளம்பருவத்தின்) தளர் நடையுடைய புதல்வரே! உலகெலாம் வழிபட்டு வணங்குகின்ற சரவணோற்பவரே! பெருமையிற் சிறந்தவரே! அடியேனது ஆவியைப்பற்றுவதற்காக இயமன் வருகின்றநாளில் பிறகிட்டு ஓடவும், தினந்தோறும் பொதுமகளிர் இடத்திற்சென்று அவர்களது புற அழகைக்கண்டு அதில் ஈடுபட்டு அன்புகொண்டு மனம் உருகி அவர்களிடத்திற் பொருந்துகின்ற சினேகமானது நீங்கவும், சத்துவம் இராசசம் தாமசம் என்ற முக்குணங்களும் இறந்துபடவும், தாம் எழுந்தருளியுள்ள திருச்செந்தூரின் தத்துவத்தையும் அது கடற் கரையில் அமைந்திருப்பதன் காரணத்தையும பிரணவாகாரமாக ஆங்கு ஆலயம் அமைந்திருக்கின்ற நிலையையும் உணர்ந்து மெய்யுணர்வையடையவும், கந்தனாகிய தேவரீரை உள்ளபடி அறிந்து அறிவு மார்க்கத்தில் சென்று உண்மைப் பொருளைச் சேருகின்ற முத்திநெறி இதுவே என்று தெளிவுறவும், தணிதலையடையாத எனது மனமாகிய கல்லானது உருகி நெகிழ்ச்சியடைந்து உரையற்று என்செயலால் எல்லாம் நிகழுகிறதென்ற தற்போதம் அறவே அழிந்து உண்மை ஞானம் வரவும தேவரீரது அருளவடிவின் திவ்ய தெரிசனையை அடியேன் என்று பெறுவேன்?

## விரிவுரை.

அந்தகன் வருந்தினம் பிறகிட :—

குமாரக்கடவுளது தெரிசனைப்பட்டவர்களைக் கண்டால் இயமன் பிறகிட்டு ஓடுவன். இதனை

"மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனையாள இவண்
வந்திடாயோ"

குமரா சரண சரணமென் றண்டர் குழாந் துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுகம் ஆறுங் கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென் செயுமே

என்ற திருப்புகழ் கந்தரலங்காரத் திருவாக்குகளால் தெளிக.

இயமன் தனது தூதுவர்களைப்பார்த்து சிவமூர்த்தியை நினைந்து வணங்கி "தூதர்களே! சிவபெருமானுடைய அடியார்களைக்கண்டால் நீங்கள் பயபக்தியுடன் வணங்கி எவ்வளவு தூரமாகச் செல்லமுடியுமோ அவ்வளவுதூரம் அகன்று செல்லுங்கள்" என்று கூறுகின்றனன். மார்க்கண்டேயரைப் பற்றச்சென்று உதையுண்டதை மறப்பனோ?

தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில் காளத்தி மன்னனை—பழுதிலாப்
பத்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்கள்
எத்தனையுஞ் சேய்த்தாக என்று

சந்ததமும் வந்து . . . . . . . . சங்கதந்தவிர :—

தினந்தோறும் பெண்களுடைய அழகைக்கண்டு மனமுருகி அவர்களது நட்பில் ஈடுபடுகின்ற அவத்தொழிலை யறவே ஒழிக்க வேண்டும் இதனாலன்றோ இராமலிங்க அடிகள் "மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்" என்று தேற்றேகாரத்தால் இறைவனைக் குறையிரந்தனர்.

முக்குணம் மாள :—

இறைவனுடைய அருட்குணத்தில் திளைத்து சிவயோகத்தில் வீற்றிருப்பார்க்கு முக்குணமும் நாசமடையும்.

"நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந்தேன் இறந்தே விட்ட திவ்வுடம்பே"

— *அலங்காரம்.*

அந்தி பகல் என்றிரண்டையு மொழித்து :—

*அந்தி:—மறப்பு, பகல்:—நினைப்பு, (கேவல சகலம்) நினைப்பும் மறப்பும் அற்றார்க்கே இறைவனது தெரிசனம் உண்டாகும். நினைப்பு மறப்பு நீங்கப்பெறுதல் அவசியம். இதனை அருணகிரிநாதர் பல விடத்துக்கூறியுள்ளார்.*

"அந்திபகலற்ற நினைவு அருள்வாயே"

"இதமகிதம் விட்டுருகி இரவுபகலற்ற விடம்
எனதென விருக்கைபுரி யோகப் புராதனனும்"

"பரமானந்தததே தேங்கார் நினைப்பு மறப்பு மறார்"

"இராப்பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே"

"கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்"

*பிற ஆன்றோர்கள் வாக்குகளையும் நோக்குக:*

"நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுகக்கும் விமல னிருக்கும்"

—*திருமந்திரம்.*

"இரவுபக லில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின றுந்தீபற"

—*திருவுந்தியார்.*

"கங்குல்பக லறநின்ற எல்லையுள தெது"

—*தாயுமானர்.*

இந்திரிய சஞ்சலங்களையறுத்து :—

*நினைப்பு மறப்பும் அற்றவர்க்குப் புலன்களாலுண்டாகும் துன்பங்கள் தானே நீங்கும். தூங்கியோன் கைப்பொருள் தானே வீழ்வதுபோல் என்றுணர்க.*

"இந்த்ரிய தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ"

—*(ஒலமறைகள்) திருப்புகழ்.*

அம்புயப் பதங்களின் பெருமையைக் கவிபாடி :—

*இறைவனுடைய திருவடிக்கமலங்களின் பெருமையை அமைத்துக் கவிபாடுதல் நினைப்பும் மறப்பும் நீங்குதற்கு சாதனமாம். அத்*

*திருவடியின் பெருமையை அருணகிரியார் அநேகவிடத்திற் கூறி யுள்ளார்.*

"ஆலமுண்டகோன் அகண்டலோக முண்டமால் விரிஞ்சன்
ஆரணங்கள் ஆகமங்கள் புகழ்தாள்"

—*(தோலெலும்பு) திருப்புகழ்.*

"வீடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே"

"வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப் பாதா"

—*அநுபூதி,*

செந்திலை யுணர்ந்து உணர்ந்து :—

*அலைகள் வந்து ஓய்வடைகின்ற இடமாதலால் செந்திலுக்கு அலைவாய் என்று மற்றொரு பேருமுண்டு. நினைப்பு மறப்புகளாகிய அலைகள் வலியற்று அவனது திருவடியில் வந்து ஒடுங்க கடற்கரையில் எம்பெருமான் உறைகின்றனன். "பிறவிக்கடலில் வீழ்ந்தோரை எனது திருவடியாகிய ஓடத்தால் முத்திக்கரைசேர்ப்பதற்காகக் கடற் கரையில் யான வசிக்கின்றனன்" என்ற குறிப்பைக்காட்டுதற் காகவே முருகன் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ளான்.*

"யாதுநிலை யற்றலையும் எழுபிற விக்கடலை
ஏறவிடுநற் கருணை ஓடக்காரனும்"

—*வகுப்பு.*

"சுவர்க்கலோக மீகாம சமஸ்தலோக பூபால
தொடுத்தநீப வேல்வீர வயலூரா"

—*(அனித்த) திருப்புகழ்.*

*தூண்டுகை விநாயகர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஆனந்த விலாசஞ்சென்று வதனாரம்ப தீர்த்தஞ் சென்று ஷண்முகவிலாசத்தின் வழியே சென்று சுவாமிதரிசனஞ் செய்துத் திரும்பினால் பிரணவா காரமாக அமைந்திருக்குந் தன்மை கண்கூடு. முருகதலங்களுள் செந்திலம்பதி தலைசிறந்தது. சுவாதிஷ்டான க்ஷேத்திரம், அளக் கற்கரும் பெருமையுடைத்து. இத் தெய்வீக தலத்தை அருணகிரி யார் பிறபாடல்களில் கூறியவாறுங் காண்க.*

"செந்திலென் றவிழவுள முருகிவரும் அன்பிலன்"

" சங்கங் கஞ்சங் கயல் சூழ்தட
மெங்கெங்கும் பொங்க மகாபுநி
தந்தங்குஞ் செந்திலில் வாழ்வுயர் பெருமாளே "

" கயிலைமலையனைய செந்திற் பதிவாழ்வே "

" திருச்செந்திலை யுரைதது யந்திட அறியாரே "

கந்தனையறிந்து அறிந்து :—

*கந்தப்பெருமானுடைய சொரூபலட்சணத்தையும், தடஸ்த லட்சணத்தையும் அறிந்து*

அறிவினிற் சென்று :—

*ஞானமார்க்கத்திற் செல்லுதல் வேண்டும். அங்ஙனம் சென்றால் உண்மைப் பொருளை நிச்சயமாக அடையலாம். தணியாத சிந்தை அப்போதுதான சாந்தியை யடைந்து நெகிழும். சொல்லற்ற நிருவிகற்ப சமாதி கைகூடும்.*

என் செயல் அழிந்து :—

*எல்லாம் சிவன் செயலென உணர்ந்து, தன் செயலால் நடைபெறுகிறதென்ற தற்போதத்தை அறவே யொழித்து தன்வசமற்று பரவசமுற்றுரைதல் வேண்டும்.*

நஞ்செய லற்றிந்த நாமற்றபின் நாதன்
தனசெயல் தானே யென் றுந்தீபற
தன்னையே தந்தா னென் றுந்தீபற

— *திருவுந்தியார்.*

தெரிசனை படுவேனோ ?

*முருகப்பெருமானுடைய தெரிசனையுண்டாயின் அந்தகன் பிறகிடுதலும், அரிவையர்க்கு அனபுருகு சங்கதந் தவிர்தலும், முக்குணமொழிதலும், அந்திபக லழிதலும், இந்திரிய சஞ்சலங்களறுதலும், அம்புயப்பதங்களின் பெருமையைக் கவிபாடுதலும், செந்திலையுணர்தலும், கந்தனையறிதலும், அறிவினிற்சென்று தெளிதலும், தணியாத சிந்தை யவிழ்தலும், உரை யொழிதலும், தன்செயலழிதலும் மெய்ச் சிந்தை யடைதலும் உண்டாகும்.*

சரண் சரண் சரணெனக் கும்பிடு புரந்தரன் பதிபெற :—

*சிவ பெருமான்பால் வரம் பெற்றுத் தருக்கிய சூரபன்மனுடைய கொடுமைக்கு அஞ்சி இந்திரன் பத்தினியுடன் மேருகிரியினோர்சார்*

மூழைக்குள் ஒளிந்திருந்தனன். அக்கால் சூரபன்மன் பானுகோபனை ஏவி இந்திரலோகத்தை தீவாய்ப்படுத்தி இந்திரன் மகனாகிய சயந்தனையும் தேவர்களையும் தேவமாதர்களையும் சிறைப்படுத்தினன். இந்திரன் தனது உலகத்தையும் மகனையும் இழந்து பல யுகங்களாக வருந்தி இனி உய்வுபெறுங்காலமு முண்டோ? என ஏங்கி சிறகற்ற பறவைபோல் தளர்ந்த மனமுடையவனாய் எந்தை கந்தவேளிடமெய்தி "அமரர் பயந்தவிர்க்குங் குமரநாயக! மூவர் முதல்முதல்வ! வேற்படை விமல! நின் திருவடியே சரணம்; உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்; புகலிடம் வேறில்லை; தஞ்சம் தஞ்சம்; எளியேனைக் காத்தல் நின்கடன்" என்று கதறி முறையிட்டனன். வேண்டுவார் வினைப்பகையறுத்து வேண்டிய போகங்களை நல்கும் வேலாயுதக்கடவுள் சூராதியவுணர்களைச் செற்று, இந்திரன் மகனையும் தேவமாதர்களையும் சிறைமீட்டு இந்திரனுக்குப் பொன்னுலகளித்துப் பொன்று வாழ்வில் இருத்தினர்

"வாலகுமர குக கந்த குன்றெறி
வேல மயில என வந்து கும்பிடு
வான விபுதர்பதி யிந்திரன வெந்துயர் களைவோனே"

—(ஓலமறை) திருப்புகழ்.

திருவரைக்கிண்கிணி கிணின் கிணின் என :—

என்றுமகலாத இளமைக்காரனாகிய குழந்தைவேலனது இடையிலணிந்துள்ள சதங்கையின் ஓசை பதினாலுலகங்களுங் கேட்டன. அதன் இன்னோசையால் உலகங்களெல்லாம் மகிழ்ந்தன. இதனை அருணகிரிநாதர் உரைக்குமாறு காண்க.

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசை யந்த
விண்கமழ் சோலையும வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினாலுலகமுங் கேட்டதுவே.

மணித் தண்டைகள் கலின கலின கலினென :—

இணையற்ற வீரர்களது பாதத்தில் வீரகண்டாமணி கட்டுவது மரபு. முருகவேள் அதிபராக்ரம வீரராதலால் இரத்தின மணிகள் பதித்த வீரகண்டாமணிகளும் தண்டைகளும் அவருடைத் திருவடிகளில் மிளிர்கின்றன.

"அணிமணித்தண்டையார்க்கும்
செழுமலரடியுங் கண்டான் அவன்தவம் செப்பற்பாற்றோ"

—கந்த புராணம்.

" கழலொலிதண்டையுங் காலு மோக்கவந்து
வரமேனக் கருள்கூர்வாய் "

" இனியநாத சிலம்பு புலம்பிட
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிசேராய் "

" இசைத்திடுஞ் சந்தபேத
மொலிததிடுந் தண்டை சூழும்
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே "

— திருப்புகழ்.

சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே :—

மொழியுஞ் சமயமனைத்துக்கும் முதல்வனுனபடியால் முருகப் பெருமானை உலகமெலாம் வணங்குகின்றன. யாவர் எத்தெய்வத்தை வணங்கினும் அவ்வணக்கம் முருகனையே சாரும்.

" நவலோகமுங் கைதொழு நிசதேவலங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே "

— (சிவனுர்) திருப்புகழ்.

## கருத்துரை.

சகமெல்லாம் தொழுகின்ற சரவணபவரே! பெருமையிற் சிறந்தவரே! கூற்றுவன் பிறகிட்டு ஓடவும், பொதுமகளிர் சினேகம் நீங்கவும், முக்குணங்கள் ஒழியவும், செந்திலம்பதியின் தத்துவத்தையுணர்ந்து மெய்ஞ்ஞானத்தை யடையவும், தேவரீரை யுள்ளபடியறிந்து, மூக்திநெறி இதுவே என்று தெளிவுறவும், என்மனமாகிய கல்லானது உருகி தற்போதம் அழிந்து உண்மையான அறிவுவரவும் தங்கள் தெரிசனையை என்று அடியேன் பெறுவேன்.

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(76-வது பக்கத் தொடர்ச்சி.)

रणद्धंसके मञ्जुलेऽत्यन्त शोणे
मनोहारि लावण्य पीयूषपूर्णे ।
मनःषट्पदो मे भवक्लेशतप्तः
सदा मोदतां स्कन्दते पाद पद्मे ॥

(9) ரணத்3த4ம் ஸகே மஞ்ஜு லேத்யந்த சோணே
மனோஹா ரிலாவண்ய பீயூஷ பூர்ணே ।
மன: ஷட்பதோ3மே ப4வக்லேச தப்த:
ஸதா3 மோத3தாம் ஸ்கந்த3 ! தே3பாத3 பத்மே ॥

## அவதாரிகை.

முன் சுலோகங்களினால் சுவாமியின் வாஸஸ்தானமாகிய ஸமுத்திரக்கரை, பர்வதம், சுவாமிவீற்றிருக்கும் மஞ்சம் இவைகளே. அடியவர்களின் பிறவித்துன்பத்தைப் போக்கி பேரின்பத்தை யளிக்க வல்லனவென்பதால் இத்தகைய சிறப்புவாய்ந்த ஸ்தலத்தைத் தரிசிப்பதும், அங்கு அன்பர்களுக்கு அருள்செய்யவே எழுந்தருளியிருக்கும் கந்தக்கடவுளின் கழலிணையைப் பணிவதுமே மனிதயாக்கையின் பயனெனப் பெறப்பட்டது. அத்தகைய திருவடியை இச்சுலோகத்தில் அழகாக வர்ணிக்கின்றார்.

## பதவுரை.

ரணத்தம் ஸகே - ஒலிக்கின்ற அன்னப் பக்ஷிகளையுடையதும் (சப்திக்கின்ற பாதசாங்களையுடையதும)
மஞ்சுலே - மிக அழகியதும்
அதயந்த சோணே - மிகச் சிவந்ததும்
மனோஹாரிலாவண்ய பீயூஷ பூர்ணே — மனத்தைக் கவருகின்ற இனிய அமுர்தத்தால் நிறைந்ததும (மனததைக கவருகின்ற அழகாகிய அமுர்ததால் நிறைந்ததும் ஆன)
தே பாதபதமே - உனது திருவடியாகிய தாமரைப்பூவின் கண்,
ஹே ஸகந்த ! - ஓ கந்தப்பெருமானே,
பவக்லேச தப்த: - ஸம்ஸாரதாபத்தால துன்பப்படுகின்ற,
மே மன: ஷட்பத: - என் மனதாகிய வண்டானது,
ஸதா - எப்போதும்,
மோததாம - சந்தோஷத்தை யடையட்டும்.

## பொழிப்புரை.

பசியினாலும் தாகத்தினாலும் துன்புற்றிருக்கும் வண்டானது மது நிறைந்ததும் குளிர்ச்சி பொருந்தியதுமான தாமரைப்பூவை யடைந்து எவ்வாறு ஆனந்திக்குமோ அவ்வாறே சம்சாரதுக்கத்தால் துன்புற்றிருக்கும் என்மனது ஓ கந்தப்பெருமானே ! தேவரீருடைய திருவடியை யடைந்து சந்தோஷததை யடையட்டும்.

सुवर्णाभदिव्यां बरोद्भासमानाम्
क्वणत्किङ्किणी मेखला शोभमानम् ।
लसद्धेमपट्टेन विद्योतमानम्
कटिं भावये स्कन्दते दीप्यमानम् ॥

(10) ஸுவர்ணாப திவ்யாம் ப ரோத் பாஸமானம்
க்வணத் கிங்கிணீ மேகலா சோப மானம் ।
லஸத்தேம பட்டேன வித்யோத மானம்
கடிம் பாவயே ஸ்கந்த ! தே தீப்யமானம் ॥

## பதவுரை.

ஹே ஸ்கந்த ! - ஓ கந்தப்பெருமானே,

ஸுவர்ணாப திவ்யாம் பரோத பாஸமானம் - பொன்போல் பிரகாசிக்கின்ற உயர்ந்த பீதாம்பரத்தை யுடையதும்,

க்வணத் கிங்கிணீ மேக லாசோபமானம் - ஒலிக்கின்ற ஒட்டியாணத்தினால சோபிக்கிறதும்,

லஸத்தேம பட்டேன வித்யோதமானம் - அழகிய தங்கப்பட்டத்தால் பிரகாசியாநின்றதும,

தீப்யமானம் - இயற்கையாகவே ஒளிர்கின்றதுமான,

தெ - தேவரீருடைய,

கடிம - இடையை,

பாவயே - தியானிக்கின்றேன்.

## பொழிப்புரை.

திவ்வியமான பீதாம்பரம், ஒட்டியாணம், தங்கப்பட்டை இவைகளால் அலங்கரிக்கப்பெற்றதும், இயற்கையாகவே ஒளிர்கின்றதுமான தேவரீரது இடையை தியானிக்கின்றேன். இதனால் தேஜோரூபமாக இருக்கும் இடையை தியானிப்பவர்கள் தேஜோரூபிகளாக ஆவார்கள் என்னும் உண்மையும் உணர்த்தப்பட்டது.

पुलिन्देशकन्या घनाभोगतुङ्ग
स्तनालिङ्गनासक्त कास्मीररागम् ।
नमस्याम्यहम् तारकारे तवोरः
स्वभक्तावने सर्वदा सानुरागम् ॥

(11) புலிந்தேச கன்யா கனா போக துங்க
ஸ்தனா லிங்க னாஸக்த காஸ்மீர ராகம் |
நமஸ்யாம் யஹம் தாரகாரே ! த வோர:
ஸ்வ பக்தாவனே ஸர்வதா ஸானு ராகம் ||

## பதவுரை.

ஹே தார காரே - தாரகாசுரனைச் சஙகரித்தவரே,

புலிந்தேச கன்யா கனபோகதுஙகஸ்தன லிங்கனஸக்தகாஸ் மீராகம் - வேடராஜாவின் பெண்ணாகிய வள்ளியம்மையின் பருதத தனங்களைத தழுவியதனல் ஒட்டிக்கொண்ட குஙகுமச் சாயத்தையுடையதும,

ஸர்வதா - எப்போதும,

ஸ்வபகதாவனே - தனது பகதர்களைக் காப்பாற்றுவதில்,

ஸானுராகம் - பற்றுடையதுமாகிய,

தவ - தேவரீருடைய.

உர: - மார்பை,

அஹம - நான்,

நமஸயாமி - நமஸ்கரிககிறேன்.

## பொழிப்புரை.

வள்ளியம்மையின் ஸ்தனங்களினின்றும் ஒட்டிக்கொண்ட குங்குமச்சாயத்தை யுடையதும தனது அடியவர்களைக் காத்துக் கொள்வதில் பற்றுடையதுமாகிய தேவரீருடைய மார்பை தியானிக் கின்றேன். இதனால் கந்தக்கடவுளானவர் அடியவர்கள் எத்தகைய குற்றம புரிந்தாலும் பொறுத்து ரட்சிக்கும் கருணைக்கடலென்பது பெறப்பட்டது.

(தொடரும்.)

---

# வினு விடை மணிகள்.

## ஆதி சங்கரர்.

கே :—தானம் என்பது எது ?

ப :—கேட்காது கொடுததல்.

கே :—சிநேகிதன் யார் ?

ப :—பாவஞ் செய்யாது தடுப்பவன்

கே :—அழகு எது ?

ப :—சீலம.

கே :—வாக்கிற்கு அழகு எது ?

ப :—சத்யம்.

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

(83-ம் பக்கத் தொடர்ச்சி.)

பங்கயாசனன் இவைகளைக்கூற ஐங்கணைக் கிழவனும் மன்மதன் உள்ளம் வருந்தி, ஆதிநாயகராம் அரனாரிடம் மாறுகொண்டு எதிர்த்துப் போர்புரியேன்? இஃதன்றி வேறு எக்கருமத்தைக் கட்டளையிடினும் இமைப்பொழுதில் செய்வேன்" என்றனன். பிரமன் அதுகேட்டு வெகுண்டு "அறிவிலியே! என்னுடைய இன்னுரைகளை மறுத்தனை; நானுரைத்தவண்ணம் புரிவையேல் பிழைப்பாய்; இன்றேல் உனக்கு சாபந்தருவேன்; இவ்விரண்டில் எது நினக்கு உடன்பாடு? ஆராய்ந்து கூறுதி" என்றனன். மன்மதன் இவ்வசனங்களைச் செவிமடுத்து மனங்கவன்று பெருமூச்செறிந்து "இனி நாம் செயத்தக்கது யாது?" என்று சிந்தித்து, ஒருவாறு தெளிந்து மலரவன் மாமுகம் நோக்கி வகுக்கலாயினன். "நாமகள் நாயக! சிவமூர்த்தியிடம் எதிர்த்துச் செல்லுவனேல் அப்பரமனது நுதல்விழியால் மாள்வேன்; இன்றேல் நினது சாபத்தால் அழிவேன்; இவ்விரண்டில் எது தக்கது என்னில், சிவமூர்த்தியினது நெற்றிக்கண்ணால் அழிந்தால் பின்னர் ஒருகாலத்தில் உய்வேன்; நினது சாபத்தாலழியில் அவ்வுய்வு பெறுமாறில்லை; ஆதலால் யான் நின்னுரைப்படி செல்லுவேன்; சினம் கொள்ளற்க" என்றனன். உடனே பிரமன மனமகிழ்ந்து "மதன! நன்று; நன்று; நின்னை மகாதேவரிடம் தனித்து அனுப்புவோமல்லம்; யாமும் நின்னைத் தொடர்ந்து வருவோம்; நீ செல்லுதி" என்று அன்புடன் அனுப்பினன்.

மதனன் மலரவன்பால் விடைபெற்று தன்னிருக்கை சென்று நிகழ்ந்தவற்றை தனது பத்தினியாகிய இரதியிடம் புகல, அவள் சிவமூர்த்தியிடம் செல்லுதல் தகாதெனமறுத்துரைக்க, மதனன் அவளைத் தேற்றி மலர்க்கணைகள் நிறைந்த அம்புக்கூட்டைப் புறத்தேகட்டி, கரும்புவில்லை எடுத்து குளிர்ந்த மாந்தளிராகிய வாளை இடையிற் சேர்த்து, குயில், சமுத்திரம் முதலியவைகள் முரசுவாத்தியங்களாய் முழங்க, மீனக்கொடியுடன் சேர்ந்ததும், கிளிகளைப்பூட்டியதும், சந்

திரனைக் குடையாகவுடையதுமாகிய தென்றல் தேரின்மேல் ஊர்ந்து இரதியுடன் புறப்பட்டு எம்பெருமான் வைகும் கயிலைமலையைக்கண்டு கரங்களைக்கூப்பி வணங்கி, தேரைவிட்டிறங்கி தன்னுடன் வந்த பரிசனத்தை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு, இரதிதேவியுடன் வில்லும் அம்பும்கொண்டு பெரும்புலியை நித்திரையைவிட்டெழுப்ப ஒரு சிறு மான் செல்லுவதுபோல் கயிலைமேல் ஏறினன். கரும்புவில்லை வளைத்து மலர்க்கணைபூட்டி ஆங்குள்ள பறவைகள்மீதும், விலங்குகள் மீதும காமவிச்சையுண்டாகுமாறு செலுத்தினன். கோபுரமுகப்பிலிருந்த நந்தியங்கடவுள் அதுகண்டு பெருஞ் சினங்கொண்டு இது மன்மதனுடைய செய்கையென்று தெளிந்து 'உம்' என்று ரீங்காரஞ் செய்தனர் அவ்வொலியைக்கேட்ட மன்மதனுடைய பாணங்கள் பறவைகள்மீதும் விலங்குகளின்மீதும் செல்லாது ஆகாயத்தில் நின்றன. அதனைக்கண்ட மதனன் நெடிதுயிர்த்து மனம்வருந்தி உளந்துளங்கி, நந்திதேவர் முன் சென்று பன்முறைவணங்கி வாழ்த்தி நின்றனன். நந்தியங்கடவுள் மதன! இத்திருமலைக்கண் நீ வந்த காரணம் யாது? என்ன, மதனன் " பிரமன் தனக்குக் கூறிவிடுத்த நிகழ்ச்சிகளை யுரைக்க, நந்திதேவர் "பிரமாதிதேவர்கள் தமக்குற்ற துன்பநீக்கத்தின்பொருட்டு இவனை இங்கு விடுத்துளார்கள்; சிவபெருமான் மோன நிலையில் அமருங்கால் "யார் வந்தாலும் உள்ளே விடவேண்டாம், மன்மதன் ஒருவனைமட்டும் விடுக்குதி" என்றருளினர். மந்திரசக்தியால் பசுவைத்தடிந்து வேள்விபுரிந்து மீளவும், அப்பசுவை எழுப்புதல்போல் மன்மதனை எரித்து, மலைமகளை மணந்து பின்னர் இவனை எழுப்புமாறு எம்பெருமான் நினைத்தானபோலும்" என்று நினைத்து " மாரனே! சிவமூர்த்தியின்பால் செல்லுதல் வேண்டுமோ? " என மன்மதன் "எந்தையே! என்னுயிர்க்கு இறுதி வரினும் பொன்னார்மேனிப் புரிசடையண்ணலிடம் சேருமாறு வந்தனன்; அவ்வெண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்' என்றனன். நந்திதேவர் "மலர்க்கணைக்கிழவ! தேவதேவன்முன் செல்லுதற்கு உன்னுதியேல் மேலைக்கோபுர வழியாகச் செல்லுதி" என்றனர் மன்மதன் அவரை வணங்கி விடைபெற்று. மேலைவாயிலின் உள்சென்று, சோதிமாமலைபோல் வீற்றிருக்கும் சூலபாணி முன் சென்றனன். ஒப்பற்ற சரபத்தைக்கண்ட சிங்கக்குட்டிபோல் வெருவுற்று உள் நடுங்கி மெய் வியர்த்து கரத்திற்பற்றிய படையுடன் அவசமுற்று வீழ்ந்தான்.

உடனே இரதிதேவி காத்தாற்றுங்கி 'இறந்தனன் கொல்' என்று நெஞ்சங்கவன்று தேற்றினள். மதனன் அவசந்தெளிந் தெழுந்து " அந்தோ ? அடியேன் என்னகாரியம் செய்யத் துணிந் தேன். நகையால் புரமூன்றுமெரித்த நமபனை எதிர்த்துப்போர்புரியு மாறு பிரமதேவன் என்னை இங்கனுப்பினர். இன்றே எனக்கு அழிவு வந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. எண்குணத்திறைவனும் ஈசனைக் கண்டவுடனே உள்ளம வெருவி என்னுயிரை யிழந்தவன் போலாயினனே ? இனி எதிர்த்துக் கணைகளைப்பொழிந்தால் உய்கு வனோ ? கணைகள்தான் இறைவனை வெற்றி பெருமோ ? இதனைத் தேவர்கள் அறிந்திலரே. பெருஞ் சண்டமாருதத்தின்முன் ஓர் சிறு தீபம் நிற்கவல்லதோ ? அதுபோல் வாக்காலும் மனத்தாலும் அளக்க முடியாத வள்ளல்முன் என்னைத் தேவானுப்பினர். இன்னும் சின் னேரத்தில் இப்பெருமானது நெற்றிக்கண் பார்வையால் வெந்தழியப் போகிறேன். சகலலோகங்களையும் இமைப்பொழுதில் நீறுசெய்யும் நிமலனைப் பூமலர்க்கணைகொண்டு போர்புரிய வந்தது நகைபபுக்கிட மன்றோ? விதியைச்கடக்கவல்லார் யார்? அயனுதியமாராலும் விதியை வெல்லமுடியாதல்லவா ? இதனைக்கூர்ந்து நோக்கின் குன்றவில்லியின் செயலே போலும் ? இக்கருமம் எவ்வாறுமுடியுமோ ? இறைவன் திருவருள் எங்ஙனமோ அங்ஙனம் முடிக; இனி தாமதியாது எண் ணியதை முடிப்பன்" என்று பலவாறு நினைந்து கரும்புவில்லை வளைத்து சுரும்பு நாணேற்றி தண்மலர்க்கணைகளைப்பூட்டி மதிநதிச்சடைப்பெரு மான் முன்சென்று நின்றான்.

இது நிற்க, மனோவதி நகரத்தில் மலரவனை இந்திரன் இறைஞ்சி " எண்தோளிறைவன்பால் மதனனைத் தனித்தனுப்பினீர்; அவனு டைய போர்த்திறத்தைக் காணும்பொருட்டு நாமும் போவோம்" என்றனன். பிரமன் எழுந்து தேவர் குழாத்துடன் புறப்பட்டு கயிலை மலையையணுகி மன்மதனுடைய செயலைநோக்கி மழுக்காத்தண்ணலை வழுத்திநின்றனன். மதனன் சிவபிரான்மேல் குறிபார்த்து ஐந்து மலர்க்கணைகளையும் விடுத்தனன். மதனனல் விடப்பட்ட மலர்ப்பகழிகள் சிவபிரான்மேற் படுதலும் பரமேஸ்வரன் தனது நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்து மன்மதனை நோக்க, அவ்விழியி னின்றுந்தோன்றிய சிறு தீப்பொறியானது மன்மதனது உடலை எரித் தது. அதனுலுண்டாகிய புகை கயிலைமலை முழுதும் சூழ்ந்தது.

விட்ட வெம் பகழி யைந்தும் வியத்தது விமலன்மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடுஞ்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது கைலை முற்றுஞ் சூழ்புகை பரவிற் றன்றே.

அரியயனாதி யமரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விடந்தோன்றியதுபோல் புகையுந் தீயும் பரவலுற்றன. கீழ்க்கோபுர வாயிலில் காவல்பூண்டுள்ள நந்திதேவர் அதனைக்கண்டு, மதனன் மடிந்தான் என்று நினைந்து, அங்குள்ளார்களுக்கு உரைப்பார். அறிவின்மிக்கீர் ! கண்ணுதற்கடவுள்முன் சென்ற மன்மதனைச் சிவபெருமானது நெற்றிக்கண் சுட்டதென்று நினையாதீர்கள் ; அருட்பெருங் கடலாம் அரனை மலர்க்கணையால் மயக்குவனென்றெழுந்துவந்த மறச்செயலே அவனைச் சுட்டுவிட்டது; இனி தனது பதியிறந்த தன்மையைக்கண்டு இரதிதேவி அக்கினியில் வீழ்ந்த மலர்மாலைபோல் வாடி, கறைமிடற்றண்ணலைவேண்ட, நம் கருணையங்கடவுள் மன்மதனை மீளவும் எழுப்பித்தருகுவன் ; இதனை நீவிர் காணமின்" என்று கூறினர். இதனைக் கேட்டோர் உலகமுய்யும் பொருட்டாக காமனை எரித்த கருணாகரக்கடவுளது அருட்செயலையுன்னி மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வந்தித்திருந்தனர்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளான முக்கட் பெருமான் முன்னொருகாலத்தில் தனதடியாராகிய மூவரையும் எரிக்காது விடுத்து முப்புறத்தைமட்டும எரித்ததுபோல், தென்றல் தேருடைய மதனனைமட்டும் எரித்து, அவனுடன் சேர்ந்துவந்த குற்றமில்லாத இரதிதேவியை எரிக்காது விடுத்தனர். மன்மதனுடைய உடல் முழுவதும் வெந்து விபூதிபோலானபின் எம்பெருமான் பண்டுபோல் மோனநிலையில் வீற்றிருந்தனர். எல்லாம் செய்யவல்ல இறைவற்கு இஃதோ ரருமையான கருமமோ ?

கணவன் ஒரு கணத்தில் மாய்ந்த தன்மையைக்கண்டு இரதிதேவி அளப்பருந்துன்பமாகிய ஆழ்கடலில் ஆழ்ந்தனள்; கண்ணீர் ஆறுபோல் ஓடிற்று ; சரீரம் வியர்த்தது ; நாசி நெட்டுயிர்த்தது ; ஆவி ஒடுங்கிற்று; இவளும் நாயகனுடனே மடிந்தாளென்ன பார்த்தவர் பதைபதைத்துருக நிலத்தின்மேல் வீழ்ந்து மூர்ச்சித்தனள். நெடும் பொழுதுக்குப்பின் ஒருவாறு உணர்வுவந்தெழுந்து, இரு கரங்களையும் வயிற்றின்மீதறைந்து வாய்விட்டுக் கதறுவாளானாள். "திருமகளீன்ற செல்வப்புதல்வரே ! உயிர்க்குயிரானவரே ! நாராயணாது நற்

றவக்குமாரரே ! சம்பராசுரனுடைய உயிரைக்குடித்த தனிப்பெரும் வீரரே ! கரும்புவில்லைப்பிடித்த காதலமுடையவரே ! அழகிய பவள மலைபோன்ற பரசிவனாது நெற்றிக்கண்ணால் வெந்து அழிந்தீரே ! தேவர்கள் கண்களெல்லாம் இனியாவது தூங்குமோ ! அம்புயமேல் வைகும் அயனாரும் அகமகிழ்ந்தனரோ ? திரிபுரத்தை நகையா லெரித்த சிவபெருமான்மேல் மலர்க்கணை செலுத்தச் செல்லுதல் முறையல்லவென்று அடியாள் எத்தனைமுறை சொல்லியுங் கேளாமற் போயினீரே ! தேவகாரியஞ் செய்வதையே பெரிதாகத் துணிந்தீரே! உமது திருமேனி நீறாக வெந்தழிந்ததே ! இதனைக்கண்டும் சகிப்பா ருளரோ ! என்னாருயிராகிய தாங்கள் மடிந்தபின் யான் தனித்திருப் பனோ ? பரமன் விழி மாறுதலையடையவும், உமது ஆற்றல் அழிந்து போகவும், உடல் நீறாகவும், தேவர்கள் மனம் வருந்தவும், தணியாத பெருந்துன்பத்தீ என்மனத்தில் மூளவும் தாங்கள் எவ்விடம் ஒளித் திருக்கின்றீர் ? உருவத்துடன் வாராதொழியினும் அருவாகவேனும் வந்துகூற மாட்டீரோ ? என் ஆருயிர்த்துணைவரே ! அடியாள் செய்த குற்றம் ஏதாவதுளதோ ? எண்தோட்பரமனது திருக்கண்ணால் எரிந்து தாங்கள் இறந்த இப்பழியானது தேவர்களிடத்திற் சென் றதோ ? இந்திரன்பாற் சென்றதோ ? உம்மையிக்கருமத்தில் ஏவிய நான்முகன்பாற் சென்றதோ ? அரனாது மோனநிலையை மாற்றுவ னென்றுவந்த தங்களிடத்தில் சென்றதோ ? யாரிடஞ் சென்றதோ ? முப்புரமெரித்த முழுமுதற் கடவுளது யோகத்தைத் தவிர்க்குமாறு நின்னை வேண்டிய தேவர்கள் எல்லோருமா இறந்தனர்கள் ? என் அருமைக்கணவா ? தாங்கள் ஒருவரே யன்றோ உயிர்துறந்தீர். தேவர்கள் தங்களைக் கொல்லாமற் கொன்றனரே ; என்னுயிரையுங் கொலைசெய்தனரே ; பொல்லாதவர்க்கு நன்றிசெய்தல் தம்முயிர்க் கல்லவோ முடிவுநேரும் ? யான்முற் பிறவியில் என்ன தீவினைசெய் தேனோ ? என்னைப்போன்ற இளமகளிர்க்கு யாது தீங்கு புரிந்தேனோ ? விதியை யாரே யறியவல்லார். அன்பிற் குறைவிடமே ! என்னை யாண்டருள்புரிவீர். நெருப்புக்கண்ணுடைய நிமலனை நோவதற்கு என்ன ஞாயமுளது ?

பொன்செய்தார் முடிகாணேன் அழகொழுகுந் திருமுகத்துப்
பொலிவு காணேன்
மின்செய்பூ ணணிதலவும் புயங்காணேன் அகன் மார்பின்
மேன்மை காணேன்

கோன்செய்பூங் கணைகாணேன் சிலைகாணேன் ஆடல்புரி
கோலங்காணேன்
என்செய்வேன் என்கணவா என்னை யொழித்
தெவ்விடத்தே இருக்கின்றயே.

உயிர்த்துணைவரே! ஆதி நாளையில் அக்கினிசாட்சியாக அரிய யஞ்ஞாதி யமரர்கள் முன்னர் எனது கழுத்தில் மங்கல நாண்பூட்டி என்னை மணஞ்செய்துக் கொண்ட போது "எந்நாளும் உன்னைப் பிரியேன்" என்று சத்தியம் செய்தீரே. அச்சாரத வாக்கியத்தை மறந்து என்னைத் தனியே விடுத்து நீங்குதல் தருமமோ? சிவமூர்த்தியிடஞ் செல்வாயென்று தங்களை யனுப்பியதேவர்கள் இப்போது தங்களை எழுப்ப மாட்டார்களோ? தங்களுடைய தந்தையாகிய நாராயணரை வல்லமை யுடையவரென்று கூறுகின்றனரே? அவருடைய மருமகளாகிய அடியாள் ஓவென்று கதறியழுவதைக்கண்டு ஓடிவந்தாரில்லை; நித்திரையிலிருக்கின்றார் போலும்? வெந்தழியவேண்டுமென்று தமது தலையில் விதித்திருந்தால் அவர்களையெல்லாம் வெறுப்பதில் என்னபயன்? அருமைக்காதலரே! மறைபயிலும் மலரவனையும், மகபதியையும், தங்களையீன்ற மாயவனையும், முனிவர்களையும், மற்றுள்ள யாவரையும் தமது மலர்க்கணையால் மயக்கி வெற்றி பெற்றீர்; அதுபோல் ஆலமுண்ட அண்ணலையும் நினைத்து அனலிடைப் பட்ட விட்டிறபூச்சிபோல் இவ்வாறு அழிவுற்றீர். குளிர்ந்த பனிநீர் விசிறிக்கொண்டு விளையாடி மலர்கொய்து நந்தனவனத்திடைசென்று பூவணைமிசை தென்றல்காற்றுவீச சந்தனச்சேறுடி நாம் இருவரும் கருத்தொருமித்து ஓருடலென ஒருமித்துவாழ்ந்த இன்ப வாழ்வெல்லாம் கனவு கண்டாற்போலாயிற்று. மருமகனென்று அவமதித்த தக்கனது மகத்தையழித்த வள்ளலாகிய மதிமுடிப்பரமனை வெல்லுதற்பொருட்டு தேவர்கள் தங்களை விடுத்தனரே? அன்னவர்களால் வெந்தழிந்தனை, தங்களைப்போல் யானும் துன்பமென்னும் வெந்தழலால் எரிகின்றேன். தாங்கள் சென்ற இடத்திற்கு யானும் வருகின்றேன்; என்னுயிர்க்குயிரே!" என்று பலவாறு புலம்பிவருந்தினள்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாயநம:

# கிருகஸ்தம்

(மனையறம்)

(27-வது பக்கத் தொடர்ச்சி.)

பிரமசரியத்தை மேற்கூறிய விதிப்படி அனுஷ்டித்து இருபத்தைந்து ஆண்டுக்குமேல் (ஆயுளின் இரண்டாவது பாகத்தில்) அக்கினி சாக்ஷியாக மணமுடித்துக் கொண்ட இல்லாளுடன் இல்லத்திலிருந்து செய்யப்படுவது கிருகஸ்தம் அவ்வாறு மணமுடித்துக்கொள்ளும் கன்னிகை தன்குலத்திற் பிறந்தவளாயும், தன் கோத்திரத்திற் பிறவாதவளாயும், நோய் முதலியன உள்ள பாரம்பரையிற் பிறவாதவளாயும், மகள்தங்கை முதலிய முறையிற் சேராதவளாயும், தனக்கு இளையவளாயும் இருத்தல்வேண்டும்.

நற்குலத்தில் தோன்றிய நல்லொழுக்கமுடைய நங்கையுடன் கருத்தொருமித்து தருமநெறியில் பொருளைச் சம்பாதித்து அப்பொருளை அறவழியில் செலவழித்து ஈசுர்பக்தியுடையவனாய் வாழுதல் வேண்டும். கிருகஸ்த தருமம் உயர்ந்ததென்று ஆன்றோர்கள் முடிவு கட்டியுள்ளார்கள். கிரகஸ்தன் தனக்கென்று சமையல் செய்யப்படாது. அதிதிகளுக்கென்றும் தேவ ஆராதனைக்கென்றும் சமைத்தல் வேண்டும், பசுவை இம்சித்தல் கூடாது. சந்தியாகாலங்களில் உணவருந்தபடாது. பகலிலும் முன்னிரவிலும் பின்னிரவிலும் ஒரு போதும் தூங்கப்படாது. ருதுகாலந் தவிர மற்றைக் காலங்களில் மனைவியை அழைக்கவுங்கூடாது. கிருகஸ்தன் சமையல் செய்யாதவர்களான பிரம்சாரிகளுக்கும் சந்யாசிக்கும் அன்னமளிக்கவேண்டும், தன்னுடைய பத்தினியிடம் இன்பத்தை நுகர்ந்து மனத்தை அடக்கி பாபத்தை விலக்கி அறநெறியில் ஒழுகவேண்டும். உபாத்தியாயன், ஆசாரியன், அம்மான், அதிதி, தன்னை அடுத்தவன், வயோதிகன், இளைஞன், நோயாளி, வைத்தியன், தாயாதி, சம்பந்தி, பந்து, மாதா, பிதா, ஒத்தகோத்திரத்தில் பிறந்தபெண், சகோதரன், புத்திரன், மனைவி, புத்திரி, வேலைக்காரர்கள் இவர்களுடன் கலகஞ்செய்யக்கூடாது. இந்தக் கலகங்களை விட்டால் எல்லாப்பாவங்களாலும் விடப்படுவான்,

இவர்களால் கலகமில்லாமல் ஜயிக்கப்பட்டவன் எல்லாவுலகங்களையும் ஜயிப்பான். மூத்த தமையன் பிதாவுக்கு சமானம். மனைவியும் மகனும் தன் சரீரமே தொண்டர்கள் (வேலைக்காரர்கள்) தன்னுடைய நிழல், இல்வாழ்கையில் நாயகனும் நாயகியும் கருத்து வேறுபாடின்றி நடக்கவேண்டும். மனைவியினுடைய பணிவிடை முதலியவற்றினாலே கணவன் பரதாரத்தை நினையாமலும், கணவனுடைய அன்பு முதலிய வற்றினாலே மனைவி பரபுருஷனை நினையாமலும், பரஸ்பரம் ஒருவரை யொருவர் அன்புபாராட்டி மிகவும் ஒற்றுமையுடையவராக இருக்க வேண்டும் அப்படியுள்ள குடும்பம் மென்மேலுந் தழைத்தோங்கும். கணவன் தன்மனவியை விரும்பாதொழிந்து பரதார கமன முடைய வனாயிருந்தால், மனைவி கற்பொழுக்கத்தை விட்டு பரபுருஷனை இச்சித் தல் கூடும்; அதனால் அக்குலம் தாழ்ந்துவிடும். கணவன் வெளியூர் போகநேரிட்டால தான்போய் வருமளவும் மனைவிக்கு உணவுக்கு வேண்டிய வறறை உதவி விட்டுப்போக வேண்டும.

பிரன்மனைவியையும், வேசையையும், விதவையையும் விரும்பாத வனாகி, தன்மனைவியை விதிக்கப்பட்ட நாள்களில் கலந்து வாழ்பவன் கிருகஸ்தனேயாயினும் அறிஞர்களால் பிரமசாரியாகவே மதிக்கப்படு வான். அவன் இம்மையிலே நோயற்றவனாகவும், திடதேகமுடை யவனாகவும், நீண்டஆயுளும் சற்புத்திரப் பேறுமுடையவனாகவும் பகைவர்கள் வணங்க புகழும் புண்ணியமும் பெற்று இனிதுவாழ்ந்து, மறுமையில் நற்கதியை அடைவான். தன்னையே கதியென்று நம்பி மணந்துகொண்ட பத்தினியை வெறுத்து அவளை உணவு உடை முத லியவைதந்து ஆதரியாமல் அவளுக்குத் துன்பஞ்செய்தவனும் தன் மனைவியை விடுத்து வேசையிடத்தாயினும் பிறன் மனைவியிடத்தாயி னும் போனவனும், தன் மனைவிகொணர்ந்த சீதனப்பொருளை அழித்த வனும், கொலை புலை களவு கள் பொய்முதலிய தீமைகளைப் புரிந்தவனும் அளவில்லாத காலம் நரகிலே கிடந்துழலுவர். பிறவிதோறும் சூலை, க்ஷயம், தொழுநோய், குன்மம், முதலிய பிணிவாய்ப்பட்டு வருந்துவர்.

கிருகஸ்தன் எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையவனாக இருத் தல்வேண்டும். மோட்சத்தையும் தீர்க்காயுளையும் நோயின்மையையும் விரும்பினோர் புலால்புசிக்கலாகாது. புலால் புசித்தவன், அதற்கு உடன்பட்டவன், ஆயுதங்களைக் கொண்டு உயிர்களைக் கொன்றவன், செய்யென்று சொன்னவன், கொண்டுவந்தவன், கொலைசெய்வதைக் கண்டு மகிழ்ந்தவன், விரைவிலாகட்டுமென்று துரிதப்படுத்தினவன்,

சமைத்தவன் ஆகிய எண்மரும் நரகத்தை யடைவார்கள். ஜீவகாருண்யத்தால் புலாலைவிலக்கினவர் அசுவமேதயாகஞ்செய்த பலனையடைவார்.

பிறஉயிர்களுக்கு ஒருதுன்பஞ்செய்தால் அத்துன்பம் மீளவும் தனக்கே வரும்; ஆதலால் எந்த உயிர்களுக்கும் எவ்வகையான இன்னலும் புரியாது, உயிர்களுக்கு இனிமையே புரிந்து கொண்டு இருத்தல் வேண்டும். மெய்வாய் கண் நாசி செவி எனகிற ஐம்புலன்களையும் தீய வழியிற் செல்லாவண்ணம் அடக்கல்வேண்டும்.

பிறரிடை யின்னா வியற்றிடிற்றமக்குப்
பிழைப்பற வெய்து மென்பதனை
அறிந்தன ரறிஞ ராதலாலுயிர்க
ளனைத்தையுந்தம்முயிர் போல
நெறியினிற் கருத லினியவா மைந்து புலனையு
நெறியலாவழியிற்
பொறியினிற் செலுத்தா தடக்கனன் குணர்ந்த
புலமையோரொழுக் கெனப்புகல்வார்

—காசிகாண்டம்.

சரீரம் வருந்தி யுழைக்காவிடின் பொருள்வாராது; பொருளில்லாமல் தருமஞ்செய்ய இயலாது; தருமமில்லாமல் இன்பமெய்தாது; ஆதலால் கிருகஸ்தர் ஒவ்வொருவரும் தத்தம் தொழில்களை ஊக்கமுடன் புரிதல்வேண்டும் இல்வாழ்க்கையிலிருப்போன் தாய், தந்தை, குரு, மனைவி, மகன, விருந்தாளி, வழிபாடுசெய்வோன், அதிதி, ஓமாக்கினி ஆகிய ஒன்பதுபேரையும் தினமுங் காப்பாற்றவேண்டும். இல்லையேல் மனிதரிற் பதரென்று கூறப்படுவான்.

குரவனைத் தாயைத் தந்தையை மனையைக்
குற்றமில் புதல்வனை விருந்தை
இரவுநண் பகலும் வழிபடு வோனை
யதிதியை யெரியினை யீங்கு
கருது மொன் பதின்மர் தம்மையு நாளுங்
கருணைகூர்ந் தினிதளித் திடாது
மருவுமில் வாழ்க்கை பூண்டுளோன் றன்னை
மக்களுட் பதடியென் றுரைப்பார்.

—காசிகாண்டம்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்ற பொதுமறையின் பொன்மொழிப்படி கிருகஸ்தன் தனது வீடு தேடிவந்த விருந்தினருக்கு அடியிற்கண்ட ஒன்பது உபசாரங்களை உஞற்றுதல்வேண்டும்.

அவையாவன:—ஆசனத்திலிருந்து எழுந்திருத்தல், நன்குமதித்தல், இனிய மொழிகளைக்கூறுதல், குளிர்ச்சியாகப்பார்த்தல், வாருங்கள் வாருங்கள் என்று கூறுதல், அவர் பேசுமுன் களிப்புண்டாகப் பேசுதல், அருகில் இருத்தல், உபசாரம் மொழிதல், அவர்கள் செல்லுங்கால் பின்னே சென்று வழிவிடுதல்.

விருந்தினனாக வொருவன்வந் தெதிரின்
வியர்த்தல் நன்மொழியினி துரைத்தல்
திருந்துற நோக்கல் வருகென வுரைத்த
லெழுதல்முன் மகிழ்வன செப்பல்
பொருந்துமற் றவன்ற னருகுற இருத்தல்
போமெனிற் பின்செல்வ தாதல்
பரிந்துநன் முகமன் வழங்கலிவ் வொன்பா
னொழுக்கமும் வழிபடும் பண்பே. —காசிகாண்டம்.

தன் இல்லத்தில் வந்தவர்களுக்குக் காலலம்ப நீர், ஆசனம், தாகத்திற்கு நீர், தம்மாலியன்ற உணவு, தாம்பூலம், வசித்தற்கு இடம் படுக்கை, விளக்கு, எண்ணெய் ஆகிய ஒனபது பொருள்களையும் கொடுத்தல்வேண்டும்.

பரதாரகமனஞ்செய்தல், நிலைதவறி நடத்தல், பொய்பேசுதல், கோபங் கொள்ளுதல், பகை கொள்ளுதல், கோள் சொல்லுதல், தகாத வார்த்தைகளைப்பேசுதல், மாயஞ் செய்தல், வஞ்சகம் பேசுதல், ஆகிய ஒன்பது குறறங்களையும் நீக்குதல்வேண்டும்.

நீராடுதல், சந்தியாகாலங்களில் (காலை மாலை) கடவுளை வழிபடுதல், பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களை ஜெபித்தல், அக்கினிகாரியம், வேதபாராயணம் (சைவர்கள் தேவார திருவாசக திருப்புகழ் முதலிய தமிழ்வேதங்களையும், வைணவர் நாலாயிர பிரபந்தம் முதலியவைகளையும் பாராயணஞ் செய்தல்), மலர்களால் இறைவனை அர்ச்சித்தல், வைசுவதேவம், (காக்கை முதலியவைகளுக்குப் பலியீதல்) பிதிர்தர்ப்பணம், அதிதி பூசை, ஆகிய ஒன்பது கருமங்களையும் இல்வாழ்வோர் ஒவ்வொருநாளும் செய்தல்வேண்டும்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாயநம:

# புனிதவதியின் நற்போதனை

K. V. சிவசுப்பிரமண்யன், B.A., சிதம்பரம்

புனிதவதி என்னும் ஒரு நங்கை அழகில் இலக்குமியையும், அறிவில் ஔவையையும், கல்வியில் கலைமகளையும், ஈசுரபக்தியில் புனிதவதியாரையும், கற்பில் அருந்ததியையும், சைவசமயாபிமானத்தில் மங்கையர்க்கரசியாரையும் ஒத்தவள். மயிலின் சாயலும், குயிலின் மொழியும், அன்னநடையும் அவளுக்கு ஈடாகா. அவள் ஒருநாள் வைகறையில் துயிலெழுந்து அவசிய கருமம்முடித்து பல் முகம் கை கால் முதலியன சுத்தம் செய்து நெற்றியில் விபூதி தரித்து வீட்டின் முற்புறத்திலும் முற்றத்திலும் சுற்றுப்புறங்களிலும் சாணந் தெளித்து அலகிட்டு வீட்டிலுள்ள பாத்திரங்களை சுத்தி செய்து கவிழ்த்து வைத்துவிட்டு நதியில்சென்று நன்னீராடி இறைவனை வழிபட்டு வீட்டை யடைந்தனள்.

பின்பு காலைச் சிற்றுண்டிமுடித்து அகத்திலுள்ளார்க்கு அன்புடனளித்து அவரவர் தத்தங் கருமங்களுக்குச் சென்றதன்மேல் அயல் வீட்டிலுள்ள தன் தோழியாகிய கமலவல்லியை அவசரமாகக்காணும் பொருட்டு சென்றனள். அப்போது பொழுது புலர்ந்து மூன்றே முக்கால் நாழிகை அதாவது எழுமணியாயிற்று. கமலவல்லியின் வீட்டுத் தெருக்கதவு திறக்கப்பட்டிருந்தது; அறைக்கதவு தாளிடப்பட்டிருந்தது: அதனால் அப்பெண்மணி இங்கு ஒருவரும் இன்னும் நித்திரையினின்றும எழவில்லைபோலும் என எண்ணி கூடத்திலிருந்த ஒரு நாற்காலியில் வீற்றிருந்து அங்கு மாட்டியிருந்த அழகிய படங்களைப்பார்த்து மகிழ்ந்து மகிழ்ந்து கமலவல்லியின் வருகைக்காக காத்திருந்தாள். அப்படங்களின் நடுவில், மாதிருக்கும்பாதியனாய் விடையேறூர்ந்தவனாய், நீலகண்டனாய், கங்கை வேணியனாய் உள்ள பரமேசுரனது உருவிலும் திருவிலும் மிக்க படமொன்று கண்ணினைக் கவர்ந்து ஒளிர்தல்கண்டு உள்ளத்திற் கிளர்ந்தெழுந்த உவகையினால் திருத்தாண்டகங்கள் சிலவற்றை ஓதிக்கொண்டிருந்தனள். கமல

வல்லியின் செவியிலே அவ்வின்னிசை புகுதலும் அருண்டு புரண்டு எழுந்து கட்டிலைவிட்டிறங்கி இடையிலிருந்த துணியை சுருட்டிவாரிக் கொண்டு அவிழ்ந்த மயிரும் சோம்பிய முகமும் மூடிமூடிவிழிக்கும் பார்வையும் உளளவளாய் மெய் தளர்ந்து ஆடி அசைந்துகொண்டு மெல்ல மெல்ல வந்து கதவின்தாளை நீக்கி கூடத்தில்வந்து புனிதவதியை நோக்கி சோம்பலோடு எதிரிலிருந்த ஒரு நாற்காலியிலமர்ந்தனள். இருந்து அசதி நீங்காமையின் உடம்பை நெளித்து முறித்துத் திமிர்வாங்கி கொட்டாவி விட்டுக்கொண்டு "நீ எப்பம்மா வந்தாய்? நேரமாயிற்றோ" என்றாள். புனிதவதி புன்முறுவல்பூத்து தன்பாடலை முடித்து "நல்லது! நீ போய் அவசிய கருமம்முடித்து முகங்கழுவி வா, பின்னர் பேசுவோம்" என்றாள். அவளது புன்முறுவலும் சொல்லும் நாணத்தையுண்டாக்கினமையின் விரைந்துசென்று கைகாலலம்பித் துடைத்துக்கொண்டு அடுக்களைவாயிலிற்சென்று வேலையாள் கொடுத்த காப்பிநீர் பருகி புனிதவதியின் அருகில் வந்துட்கார்ந்தாள். அதுகண்ட புனிதவதி சிறுநகைசெய்தனள். இருவரும் உடலும் உயிரும் போன்ற நண்பர்களாகலின் கோபம் எற்படவில்லை. பின் கமலவல்லி புனிதவதியைப் பார்த்து "தோழீ! நான் நித்திரைவிட்டு எழுந்துவந்தபொழுதும் இப்பொழுதும் என்னைப்பார்த்து நீ நகைத்த காரணமென்ன?" என்றாள். புனிதவதி சகியே! நீ வந்த கோலத்தையும் உன் பழக்கத்தையும் பார்க்க எனக்குச் சிரிப்புண்டாகியது" என்றாள். அதுபற்றி அவர்களிடையே சில சம்பாஷணைகள் நிகழ்ந்தன.

கமலவல்லி: என் கோலம் எப்படி இருந்தது? என் பழக்கத்தில் என்ன குறையிருக்கிறது? என் நன்மையின்பொருட்டுக் கூறுவாயாக.

புனிதவதி: 7½ மணியாகியும் நித்திரைவிட்டெழாதிருந்து பின் என் குரல்கேட்டெழுந்ததும், அலங்கோலமாய் வெளியில் வந்ததும் பார்க்க முதலில் சிரிப்புண்டாயிற்று; இப்போது மற்றுமுள்ள உன் பழக்கவழக்கங்களைக்காணச் சிரிப்புண்டாக்கியது

கமலவல்லி: என் கணவர் ஊரிலில்லாமையால் கவலையற்று அயர்ந்து நித்திரையிலாழ்ந்துவிட்டேன்; அல்லாமலும் இந்த நேரத்தில்தான் எப்போதும் நான் எழுவது வழக்கம்; எழுந்ததும் உன் குரல் கேட்டபடியால் அவசரமாக அலங்கோலத்தோடு வந்துவிட்டேன்; இதையன்றி யான் இப்போது இழைத்த குற்றம் என்ன?

புனிதவதி : நல்லது நெற்றியில் விபூதியிட்டுவா ; பின்னர் கூறுகிறேன்.

கமலவல்லி : ஆமாம் மறந்துவிட்டேன் ; கிருஸ்தவர் விடுதிப் பள்ளிக்கூடத்தில் யான் இளமையிற் கல்விபயின்றேன்; அதனால் அங்கே பழகிய பழக்கம் இன்னும் என்னை விடவில்லை. (எனக் கூறிக் கொண்டே விபூதி எடுத்துத்தரித்தனள்.)

புனிதவதி : இப்போது உன் முகம் எங்ஙனம் பொலிவுற்றிருக்கிறது. கண்ணாடியிற காண், " நீரில்லா நெற்றிபாழ் " என்றும் "பூதியணியார் முகம புறங்காடு" என்றும கூறப்பட்டிருக்கின்றதே, நீ இவற்றை யோதி உணர்ந்ததில்லையா ?

கமல : கிறிஸ்தவப் பாதிரிமார் பள்ளியில் இந்தப் பாடமும் எனக்குப் படிப்பித்தார்களா ? நீ நல்வினை செய்தவள், சைவப்பள்ளியில் படித்து ஒழுங்குமுறைகள் யாவும் அறிந்துகொண்டாய்.

புனித : தோழீ ! இவ்வளவு நேரம் தூங்கினதும் வைகறையில் செய்யவேண்டுமவற்றைச் செய்யாது விடுத்ததும் பிழையல்லவா ?

கமல : என்ன பிழை ? அதனால் நஷ்டமென்ன ?

புனித : எங்கள் சீலத்திற்கு மாறு அல்லவா ?

கமல : நன்று, நன்று ! உனக்கும் இந்தப் பேய்த்தனம் இருக்கிறதா ? நமது முன்னோர் இப்படி அநேக காரியங்களை அறிவீனமாய் எழுதிவைததிருக்கிறார்கள் என்று எங்கள் பள்ளிக்கூடத்து ஆசிரியை சொல்ல அறிந்திருக்கிறேன். பாதிரியார் சொல்லவும் கேட்டிருக்கிறேன். இதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. அவரவர் சுகத்தை அவரவர் கவனிக்கவேண்டும்.

புனித : ஓகோ ! உன் அறிவு இப்படி திருந்தியிருக்கிறதா ? கிறிஸ்தவர் பள்ளியில் படிப்பதில் இத்துணை தீங்குளதென்பதை இன்றுதான் அறிகிறேன்.

கமல : நல்லது, சைவாசாரங்களில் என்ன பயன் இருக்கிறது என்பதைச் சொல் பார்ப்போம். அவை வெறும் ஏட்டுச்சுரைக்காய் தானே.

புனிதவதி : சொல்லுகிறேன், கவனமாய்க் கேள்: சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன் எழவேண்டும், சூரியன் கண்ணுக்குத் தெரிய ஒருமணி நேரத்திற்குமுன் சூரியகிரணமாகிய அதன் வெப்பம் பூமிக்கு வருகிறது. அதனால் பூமியில் ஒரு மாறுதல் உண்டாகிறது.

அப்போதுதான் நமது உடம்பிலுள்ள வாத பித்த சிலேட்டுமங்கள் மாறுபாடடையும். அந்த நேரத்தில் படுத்திருந்தால் வெப்பம் தலைக் கேறி பித்தமேற்படும். அதிலிருந்து பல நோய்கள் விளையும், ஆதலால் அப்போது சயனித்திருக்கலாகாது. 5 மணிக்குமுன்பே நமது உடற்கருவிகள் தொழில் செய்யத் தொடங்கிவிடவேண்டும். அது மட்டுமன்று, ஐந்துமணியளவில் நீராடவேண்டும். ஏனெனில் அப்போதுதான் தண்ணீரின் சொந்தகுணம் நீரிலிருக்கும். அதற்குமேல் சூரியவெப்பம் நீரின் குணத்தைமாற்றிவிடும். மாறியபின் நீராடுவதால் நன்மை இல்லை. வைகறையில் குளிக்காவிடில் சூரியன்முதலிய கிரகங்களினின்றும் பூமியிலிருந்தும் உடம்பினுட்செல்லும் பல சுத்த அணுக்கள் உட்புகும்போது உடம்பின் அழுக்குகளோடு சுவறி அசுத்தமடைந்து செல்ல நேரும். அது நோய்க்கு ஏதுவாமாகையால் அவ்வணுக்கள் தோன்றுமுன்னரே உடலை அழுக்குநீக்கி சுத்திசெய்ய வேண்டும்.

கமல: எழுந்தவுடனே கடவுளைவணங்குவது எதற்காக?

புனித. மனமும் புலனும் தம செயலற்று ஒடுங்கியுள்ள நேரம் அதுவேயாம். அதனால் கடவுளை வணங்க அது நல்ல நேரம். இது ஆன்மசுகத்தின்பொருட்டு. மனம் ஆனந்தமாய்க் கடவுளை நினைத்தலால் இருதயம் குளிரும். இரத்த ஓட்டம் நன்கு பரவும்.

கமல: வைகறைத்துயிலெழுந்ததும் சாணந்தெளித்து மெழுகிறதினால் என்ன பிரயோசனம்?

புனித: தோழீ! வீட்டின் முற்றத்திலும் பக்கங்களிலும் தினசரி உண்டாகும் அசுத்தங்களும் இரவில் அதன் தொடர்பாக வந்து குவிந்த கெட்ட அணுக்களும் நிறைந்திருப்பதால் அதைப் போக்க சாணந்தெளித்தலவசியம். வீட்டின் உட்புறத்தில் நாம் வாசம் செய்வதாலேற்படும் அழுக்கை நீக்க உள்ளும் மெழுகவேண்டும். இன்றேல் அவ்வசுத்த அணுக்கள் நமக்கு நோயை விளைக்கும்.

கமல: சாணம் அவ்வசுத்த அணுக்களை நீக்கிவிடவல்லதா?

புனித: ஆம் நீக்கிவிடும். சில சமயம் பிள்ளைகள் இரவில் முற்றத்தில் மலசலங்கழித்தால் ஏற்படும் துர்நாற்றத்தை சாணந்தெளிப்பதால் போக்கிவிடுகிறோமல்லவா? மற்றும் வைத்தியர்கள் நேர்வாளம் எனும் நஞ்சு விதையை மருந்துப்பொருளாக்கவேண்டிக் கலாத்த சாணிப்பாலில் ஊறவைத்து அதன் நச்சுத்தன்மையை நீக்கு

தலை நீ கேள்வியுற்றிருப்பாய். சாணம் நச்சுத்தன்மையைப்போக்கு வதில் இணையற்றது என்பதைக்கண்டு மேல்நாட்டார்கூட அதை இப்போது உபயோகிக்க ஆரம்பித்துவிட்டனர். சாணம் அசுத்தத்தை நீக்கும் சக்தி வாய்ந்ததாகையால் நம்முன்னோர்கள் அவ்வழக்கத்தை கைக்கொண்டனர். சாணம் அழுக்கை நீக்குவதால்தான் வண்ணான் கோடிப்புடவைக்கு சாணிப்பாலேற்றுகிறான். ஒரு வீட்டில் இறந்த பிரேதத்தை எடுத்த பின்னர் தரையிலும் பண்டபதார்த்தங்களிலும் சுவர்களிலும் படுக்கையிலும கெட்ட அணுக்கள் வாயுவோடு சம்பந்தப்பட்டிருக்குமாகையால் சாணங் கரைத்தூற்றி சுத்தஞ்செய்யும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. போசனம் செய்யப்புகுமுன் இலை போடுமிடத்தில் அசுத்த அணுக்கள இருக்குமாகையால் முன்னே வட்டமாக மெழுகுவதும் அந்நோக்கம்பற்றியே, போசனமுடித்த பின் எச்சிலினலாய குற்றங்களைக் களையவேண்டி மெழுகுவர். இன்னும் சொல்வேன் கேள்: சிறுபிள்ளைகளுக்கு கையில் சொரி சிறங்கு வந்தால் கரைத்த சாணத்தில் கையை வைத்திருக்கச்செய்கிறோம்; அதனால் கிருமிகள் கொல்லப்படுகின்றன.

கமல: ஆகா! மிக நன்றாயிருக்கிறது! இதுவரை எனக்கு இங்ஙனம் எடுத்துக்கூறுவார் ஒருவருமில்லை; இன்று கேட்க கேட்க ஆனந்தமா யிருக்கிறது. இனி தினந்தோறும் விடியற்காலையில் சாணந்தெளிக்கும வழக்கத்தை மேற்கொள்ளுகிறேன்.

புனித: வீட்டையும் முற்றத்தையும் பாத்திரங்களையும் சுத்தி செய்துவிட்டு குளித்தல்வேண்டும். நீராடுஞ் சமயத்தில் உடம்பில் அழுக்கு நீங்கவும், வாசனை ஏறவும் சோப்பு பூசுதல் உசிதமல்ல. சோப்பு மிகச்சூடானது; சில அசுத்தப்பொருள்களும் அதில் சேருகின்றன. மற்றும் சோப்புக்கட்டி ஒன்றுக்கு கால் ரூபாய் அரை ரூபாய் விலைகொடுத்து வாங்கி அன்னியநாட்டிற்கு நாம் பிழைப்புண்டாக்குவதும் நம் பொருளை வீண்செலவு செய்வதும் புத்தியன்று.

கமல: அப்படியாயின் வேறு என்ன தேய்த்து நீராடலாம்?

புனித: நம்முன்னோர் நமக்கென தேர்ந்தெடுத்த வாசனைப் பொடியை உபயோகித்தல் நலம். அதில் பயற்றம்மா, கஸ்தூரிமஞ்சள், கோரைக்கிழங்கு, கார்கோலரிசி, விலாமிச்சவேர், ஆவாரை இலை, முதலிய குளிர்ச்சியும், வாசனையும, அழுக்கெடுக்குந் தன்மையும், வாய்ந்த சாமான்கள் சேர்த்து அந்த வாசனைப்பொடியை தயா

ரிப்பார்கள். இது சவர்க்காரத்தைப்போல் கெடுதலும் அசுத்தமும் உள்ளதல்ல; செலவும் குறைவு; வாசனையும் குளிர்ச்சியும் தரும். வட இந்தியாவிலுள்ள பெண்கள் பலரும் இன்றும் இப்பொடியையே உபயோகித்து வருகிறார்கள். இன்று கூட அப்பொடியைத்தான் தேய்த்துக்கொண்டேன். என்மேல் கமழும் வாசனையைப் பார். நீயும் இதை உபயோகிப்பாயாயின் அது நலமே; மற்றும் சவர்க்காரம் தோலின்மேலுள்ள இயற்கையான ஒருவகை நெய்ப்பசையை நீக்கி நாளடைவில் தோலைச் சுருங்கச்செய்துவிடுகிறது.

கமல: இதைப்பற்றி நான் இதுகாறும் அறியேன். இனி அப்படியே செய்வேன்.

புனித: இக்காலத்தில் அநேக மங்கையர் மஞ்சள் அணிதலை விட்டுவிட்டனர்; அது அறிவீனமே.

கமல: நானும் மஞ்சள் அணிவதில்லை சோப்பு தேய்த்த முகத்தில் மஞ்சள் பூசுவது கெடுதலென்று விட்டுவிட்டேன். மஞ்சளணிவதிலுள்ள நயமென்ன? அணியாவிடில் வரும் தீங்கு என்ன?

புனித: சுமங்கிலிகள் மஞ்சள் பூசுவது மெத்த அவசியம். அதனால் நாயகனது ஆயுள் பெருகும்; இன்றேல் ஆயுள் குறையும்.

கமல: நன்று நன்று! கணவனுக்கு ஆயுள்கூடுவதும் குறைவதும் மஞ்சளிலா இருக்கிறது! இது ஒரு குருட்டு நம்பிக்கை.

புனித: அப்படியல்ல; நம் தேகமும் ஆடவர்தேகமும் வித்தியாசமுள்ளவை. நமது சரீரம் சூடுள்ளதாயும் நாம் விடும் சுவாசம் நச்சுள்ளதாயும் அசுத்தமாயும் இருக்கிறது; ஆதலால் பெண்கள் நாயகரோடு சயனித்திருக்குங்கால் அவர்களது சுவாசம் நாயகன் மேற்பட்டால் நாயகன் நாசிவழியாய்ச்சென்று சுவாசப்பையில் தங்கி கேடு செய்யும். சுவாசத்தில் கேடுண்டாகவே ஆயுள் குறையும். இப்படிப் பலநாள் நடந்தால் முடிவில் மரணமும் ஏற்படும். மஞ்சளை பெண்கள் முகத்திலணிந்தால் சுவாசத்தின் நச்சுத்தன்மையை நீக்கும். அதுபற்றியே சுமங்கிலிகள் ஒரு நாளேனும் தவறாது மஞ்சள் பூசுவர். மஞ்சளின் சிறந்த குணத்தைக்கண்டுதான் பெரியோர்கள் அதை ஒரு மங்கலப்பொருளாக எடுத்துக்கொண்டார்கள்.

கமல: அப்படியா! அறிவிற் சிறந்த முன்னோர்கள் இதைக் கைக்கொண்டனர். இக்காலத்தில என்போன்ற சிறுமிகளுக்கு ஒன்றுந்தெரியாமையால் மூடத்தனமாய் மஞ்சட்பூச்சை விட்டுவிட

நேர்ந்தது. இப்போது அதன் அருமையை அறிந்தேன். மஞ்சட் பூச்சினால் முகத்தின தோல் சுருங்கிவிடும் என்கின்றனரே ? அதனால் முகத்தின் அழகு குறைந்துவிடுமெனறு சில இளம் பெண்கள் பூசுவ தில்லை, அதன் உண்மை என்ன ?

புனித: அது தவறு. முகத்தின் அழகு யார்பொருட்டு ? நாயகன் கண்டு மகிழும் பொருட்டன்றோ ? நமமால் நாயகனது ஆயுள் குறையுமானால் பினபு இந்த அழகைப் பத்திரப்படுத்திவைத் திருப்பது யார் பொருட்டு ? இது அறியாமையான செயல், மஞ் சளில் அத்தூர்க்குணமுமில்லை அதனால் முகப்பொலிவும் நீங்குவ தில்லை. அதோ உன் கணவர் சுந்தரனோடு வருகிறார், நான் போய் வருகிறேன.

கமல: போய்வா, பின்னர் பேசலாம்.

---

உ

ஓம் குஹாய நம:

# என் பிரார்த்தனை

(K. V. லோகநாதன் அவாகள், பெங்களூர்.)

அருணகிரிகளோதிய [1]பதினாறாயிரத்தை, கந்தனுக்கிசைந்த கற் பகத்தை, முன் தானவர்க்கும் வானவர்க்கும நரை திரை மூப்பு பிணி நீக்க கடற்கடைந்து [2]சுத்தனளித்ததைப்போல்—இக் கலியுகத் தில் [3]எக்காலத்தவரும் ஜனன மரணமெனும் பிரவித்துன்பத்தின்று வகல நம் கிருபானந்தவாரிதிகள் தம் [4]மூவலியினால் திருப்புகழை அமுதமாக்கிய பேருதவியினை [5]பூமியினும் பெரிதெனக்கொள்வோம். [6]திருப்புகழமிர்தமெனும செஞ்சொல் லமுத களஞ்சியம் பாரினில் பல்லாண்டு பலுகி வாழி.

1 திருப்புகழ் பதினாறாயிரமெனபர்.

2 ஸ்ரீவிஷ்ணு.

3 எவ்வயதினரும.

4 ஞானம, கா, காம் எனும மூவலி களாம்.

5 மதகளுககு சாவா மருந்தைப்போல ருளிய பெருநதகையா ராகையால் புவிதாயினும் சிறந்ததுகூறப்பட்டது.

6 தேவாமுதம் குறையுந் தன்மையது; திருப்புகழமிர்தம் குறைவுபடாதது.

அகரமுதலவெழுத்தெல்லாம ஆதிபகவன் முதற்றேயுலகு—உலகத்தோற்றத்திற்கு காரணமாயும, ஆதியாயும், சூக்குமமாயும் நிறை பரப்பிரம்ம சச்சிதானந்த சொரூபமாயுள்ள கடவுள் ஒருவனே உளன் எனும ஞான தத்துவங்களை உசிதப் படுத்துவது— ... "திருப்புகழமிர்தம் !"

ஆசையை யொழித்து அவனியின பொய் பாசத்தையெலாமழித்து அறநெறியை கைபிடித்தொழுகச் செய்வது— "திருப்புகழமிர்தம் !"

இகபர சுகமளிக்கும் தாரணிப்புகழ் இனியத தமிழ் வேத பொக்கிஷம்— ... ... "திருப்புகழமிர்தம் !".

ஈ எறும்பு ஈராகவுள்ள எண்பத்துநான்கு கோடிகளையு மீன்றவப்பனும எம்பிரான் சமராபுரி ஈசனின் ஒப்பற்ற பெருமை புகலும்— ... ... "திருப்புகழமிர்தம் !".

உத்தமிகளின கற்பிலக்கண உயர்குண லக்ஷணங்களை கைங்கர்யப் படுத்தவல்ல கற்பகத்தரு— ... "திருப்புகழமிர்தம் !".

ஊணுடுத்து ஓயாமல் கங்குல்பகலும வீண் குதர்க்கம பேசி அலைந்துதிரிந்ததை குலைத்து குகனை வழிபடச்செய்வது--"திருப்புகழமிர்தம்!".

எனது நான் எனும் அனுபவமலாதிகளின் வேர்களைந்தெரிந்து தம்பிரான திருவடித தருவது— ... "திருப்புகழமிர்தம் !".

ஏகாக்கிரசித்தமே மகிபனைக்காணும் மூலமும் முட்டற்ற மார்க்கமுமென முரசறைவிப்பது— ... "திருப்புகழமிர்தம் !".

ஐ கள்வர் புரியும் வஞ்சகத்தை செந்நீர்குடிலை நெஞ்சகத்தே யுணர்த்தி பாவங்களைப் பட்டுருவப் பண்ணி புண்ணியந் தருவது— ... ... "திருப்புகழமிர்தம் !"

ஒருவனே நல்லார்க்கும் பொல்லார்க்கும் அருளமுதந்தரும் அருமை தெய்வம், கலியுக மெய்தெய்வம! எனையாண்டுகொண்ட அறுமுகத தெய்வத்தின்— ... ... "திருப்புகழமிர்தம் !".

ஓத ஓத மெஞ்ஞான ஊற்றெடுத்து உணர்வு கலந்து ஒளி கலந்திடும் உண்மை ஞான தீபிகை— ... "திருப்புகழமிர்தம் !'.

ஔவியம், புலை, கள், களவு, காமமெனும் பஞ்சபாதகங்களைத தவிர்த்து, அயிலும அயிலொடு மயிலும், மயிலொடு அழகும பொருந்திய ஆண்டவனின் புகழ் பாடுவிக்கும்— ... "திருப்புகழமிர்தம் !".

ஃ ரங்களை கற்றிடவும் கற்றதனை நிற்றிடவும நின்றபின் கதிமருந்துத விடும் கர்த்தனின்— ... "திருப்புகழமிர்தம் !"